சார்பு நீதிமன்றம், அவிநாசி

**MCOP No. 125 /2019**

**நாள் : 06.12.2023**

**PW1 : ராகவன்**

**இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் ஊத்துக்குளியில் குடியிருந்து வருகிறேன். ஊத்துக்குளியில் குடியிருப்பதாக சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஊத்துக்குளியில் என் மாமா வீட்டில்தான் வசித்து வருகிறேன். அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் தற்போது எந்த வேலைக்கும் செல்வதில்லை. வேலை கிடைத்தால் போவேன். ஆனால், எனக்கு தலை சுத்தல் உள்ளது. நான் மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது, பூரணமாக குணமடைந்த பிறகுதான் என்னை டிஸ்சார்ஜ் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதன்பிறகு தொடர்ந்து சிகிச்சையில் இருந்தேன். மருத்துவமனையில் இருந்து கொடுத்த டிஸ்சார்ஜ் சம்மரியில் நான் நல்ல நிலையில் இருப்பதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் தொடர்ந்து சிகிச்சை எடுத்தேன். நான் தொடர்ந்து சிகிச்சை எடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு நரம்பு சம்மந்த கோளாறு எதுவும் இல்லை என்று சொல்லி டிஸ்சார்ஜ் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். விபத்தில் ஈடுபட்ட வாகனத்திற்கு தகுதி சான்றிதழ் இல்லை என்றால் சரியல்ல. இரண்டாம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் நடந்தது என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் அதிகப்படியானது என்றால் சரியல்ல. இரண்டாம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. மனுவில் கோரிய இழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.12.06 17:18:24 +0530

Subordinate Judge,
Avinashi.